**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **9/2024** |
| | | D/W's | : | **Dw1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | மொக்கத்தாயி | CASTE | : | |
| W/O | கருத்தக்கண்ணன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | கருமாத்தூர் செட்டியகுளம் | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **60** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.03.2026**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு திருமணம் 15.02.1980ல் கருமாத்தூர் பாலூத்துப்பட்டியில் நடந்தது. எனது திருமணத்திற்கு உறவினர்கள் சுமார் 60 பேர் வந்தார்கள். எனது திருமணத்திற்கு திருமண பத்திரிக்கை அடிக்கவில்லை. திருமண புகைப்படத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் கருத்தக்கண்ணனின் உறவினர் என்றால் சரிதான். கருத்தக்கண்ணனுக்கு முன்பே திருமணம் நடந்திருந்த விவரம் எனக்கு அப்போதே தெரியும் என்றால் சரியல்ல.

2. முதல் திருமணம் நடந்த நபரை இரண்டாவது திருமணம் செய்வது சட்டப்படி தவறு என்றால் எனக்குத் தெரியாது. முதல் திருமணத்தை சட்டப்படி ரத்து செய்யாததால் எனது இரண்டாவது திருமணம் செல்லாது என்றால் சரியல்ல. கருத்தக்கண்ணனுக்கு முதல் மனைவி இருந்த விவரம் வெள்ளத்தாயியின் குழந்தை இறந்தபோதுதான் எனக்குத் தெரிய வந்தது. நானும் எனது கணவர் கருத்தக்கண்ணனுடன் கருமாத்தூர் பாலூத்துப்பட்டியில் சிறிது காலமும், கரிசல்பட்டியில் 15 வருடமும், பூச்சம்பட்டி சமத்துவபுரத்தில் 25 வருடமும் வாழ்ந்து வந்தோம்.

3. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது ஆதார் அட்டை 2013ம் ஆண்டு பெறும்போது கருத்தக்கண்ணனின் சொத்துக்களை அடைவதற்காக அவர் பெயரை சேர்த்து ஆதார் அட்டை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 குடும்ப அட்டை சமீபத்தில் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல்

கருத்தக்கண்ணனை திருமணம் செய்து அவருடன் வாழ்ந்திருந்தால் பழைய குடும்ப அட்டையை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகள் 1985ல் பிறந்தார். கருத்தக்கண்ணன் எம்டிசி வங்கியில் மேலாளராக பணிபுரிந்தார். நான் இதுவரை கருத்தக்கண்ணனுக்கு எதிராக ஜீவனாம்சம் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. கருத்தக்கண்ணன் என்னை பிரிந்து வாழ்ந்ததாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. கருத்தக்கண்ணன் வாடிப்பட்டியில் அவர் வீட்டிலிருந்து இறந்தார். நான் கருத்தக்கண்ணனை பார்க்கவில்லை என்றாலும், அவர் இறக்கும் தருவாயில் அவருடன் பேசவில்லை என்றாலும் சரியல்ல. கருத்தக்கண்ணன் வாடிப்பட்டி ஊரில் கட்டிலிருந்து கீழே விழுந்து இடுப்பில் ஏற்பட்ட அடியால் இறந்துவிட்டார். அவர் கீழே விழுந்த விவரம் எனக்குத் தெரியாது, அப்போது நான் சமத்துவபுரத்தில் இருந்தேன். கருத்தக்கண்ணனுக்கு ஒரே ஒரு பெண் பிள்ளை மட்டும்தான் உள்ளார்.

5. எனது மகள் பி.எஸ்.சி., பி.எட். படித்திருக்கிறாள். உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எனது மகள் கருத்தக்கண்ணனின் உறவினர்கள் மட்டும் அவரது சொத்துக்கு பட்டா கேட்டு மனு தாக்கல் செய்ததால் அதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது மகள் வீட்டில் வைத்து பிறந்தார், அவரது பிறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. நான் எனது மகளின் இருப்பிடச் சான்றிதழைதான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், பிறப்புச் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

6. எனது கணவர்தான் கருத்தக்கண்ணன் என்பதை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருத்தக்கண்ணன் எனது பெயரில் சொத்து எதுவும் கிரையம் வாங்கவில்லை. எனது சொந்த ஊர் கரிசல்பட்டி. எனது மகளுக்கு தற்போது 41 வயது. எனது எதிர்வழக்குரையில் 2024ல் எனது மகளுக்கு 35 வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது வழக்கறிஞர் தவறாக அடித்துவிட்டார். எனது எதிர்வழக்குரையில் எனது மகளுக்கு 35 வயது என்றும், முதல் விசாரணை வாக்குமூலத்தில் 40 வயது என்றும் மாற்றி மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையிலும்,

நிரூபண வாக்குமூலத்திலும் சங்கதிகளை மாற்றி மாற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 1 முதல் 8 ஆவணங்கள் என்னால் தயார் செய்யப்பட்டவை என்றாலும் வழக்கிற்கு சம்பந்தமில்லாதவை என்றாலும் சரியல்ல. எனக்கும் கருத்தக்கண்ணனுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் அதனால்தான் அவர் முதல் திருமணம் செய்திருந்ததை பொறுத்து எந்த புகாரும் நான் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

8. வாதியும், கருத்தக்கண்ணனும் அரசு வேலையில் இருப்பதால் அவர்களது சொத்துக்களை அபகரிப்பதற்காக பொய்யாக வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் கருத்தக்கண்ணனுக்கும் கோடீஸ்வரி பிறக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

///TRUE COPY///